முழுவதிற்கும் நிறைய இப்பிரிவை அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இப்போது அதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. நாம் எந்த ஆர்வத் தோடு இருந்தாலும், இதில் ஓரளவு பகுதி பணத்தை மத்திய அரசு தரவேண்டியிருப்பதால், அவர்களுடைய ஒத்துழைப்பும், இதில் தேவைப்படுகிறது.

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளோர்.

*வினா எண் 305—திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலை வாய்ப்பு அலுவலகங்களில், வேலைத்தேடி தங்கள் பெயரை பதிவு செய்துள்ளவர்கள், தங்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் முன்பே, குறிப்பிட்ட வயதைத் தாண்டிவிடுவதால், அவர்களுடைய வயது வரம்பை உயர்த்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

[முற்பகல் 9–30]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான கேள்வி. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்வோர் எண்ணிக்கை ஏராளமாக உயர்ந்துகொண்டு, நம்மால் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்டவர்கள் வயது வரம்பை மீறி விடுகின்ற காரணத்தால், அவர்களுக்கு வேலை கிடைக்காத ஒரு நிலைமை ஏற்படுகிறது. எனவே, இதை பரிசீலனை செய்து, அவர்கள் வயதை உயர்த்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வயது வரம்பை உயர்த்துவதற்கு விரும்பாவிட்டாலும், வேலையற்றவர்களுக்குத்தான் வேலை தந்து கொண்டிருக்கிறோம்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லா மாவட்டங்களிலும் இந்த வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

1979 மார்ச் 9]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான கேள்வி என்பதைத் தாங்கள் அறிவீர்கள். தமிழ்நாட்டிலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே பணியாற்றியவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவர்களுடைய பட்டியல் கலெக்டரிடம் இருக்கிறது. நேரடியாக எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே வேலைக்காக பதிவு செய்து கொண்டுள்ளவர்களை அழைக்காமல், கலெக்டர் தன்னிடம் உள்ள பட்டியலிலே உள்ளவர்களை நேரடியாக அழைப்பதால், கடந்த 5, 6 ஆண்டுகளாக இந்த வேலை தேடித் தரும் நிறுவனங்களிலே பதிவு செய்துகொண்டுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பே கிடையாது. எனவே, அதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்து, சிவில் சப்ளைஸ் கார்ப்ரேஷன், மன்னார்க்குடி கூட்டுறவு மில்க் சொசைட்டி போன்றவைகளில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களைப் பற்றி பரிசீலனை செய்து, அவர்களுடைய வயது வரம்பைத் தளர்த்தி வேலை தரும் முறையை ஏற்றுக்கொள்வார்களா என்பதை வலியுறுத்தித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வேலை இழந்தவர்களுக்கு வேலை தரவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, வற்புறுத்தி இந்த மாமன்றத்திலே உறுப்பினர்கள் பேசியதன் விளைவுதான், இந்த முறை வந்திருக்கிறது, வேலை அற்றவர்களுக்குத்தான் வேலை தேடி தரும் நிலையத்தால் வேலை தரப்படுகின்றது, இதிலே தவறு ஒன்றும் இழக்கப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வயது வரம்பை உயர்த்துவதன் மூலம் அல்லது உயர்த்தாவிட்டாலும், வேலை இல்லாதவர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்படுகின்றது. இன்னாருக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமென்பதில்லை. வேலை இல்லாத யாருக்கு வேலை கொடுத்தாலும், அந்த அளவிற்கு திருப்தி அடைய வேண்டியதுதான்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, சில அலுவலகங்களிலே பகுதிநேர ஊழியர்களாக 10, 15 ரூபாய் பெற்றுக்கொண்டு பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை தேடித் தரும் நிலையத்திலே வேலை கேட்டால், மறுக்கிறார்கள். ஆகவே, 2, 3 ஆண்டுகளாக இப்படி பகுதி நேர ஊழியர்களாக வேலை செய்பவர்களை, அந்தத் துறையிலேயே பர்மனென்ட் செய்ய வேண்டும். அந்த முன்னுரிமையை வழங்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, ஒரு வருடத்திற்கு ஒரு முறை ரினைவல் செய்ய வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள், அப்படி ரினைவல் செய்யாவிட்டால், ஏற்கெனவே

செய்த ரிஜிஸ்திரேஷனை ரத்து செய்துவிட்டு, புதிதாக அந்தத் தேதியிலே இருந்து ரிஜிஸ்திரேஷன் செய்ததுபோல், பதிய வேண்டிய நிலைமை இருக்கிறது. அதனால், சீனியாரிட்டியை அவர்கள் இழக்கிறார்கள், எனவே, தகுந்த காரணம் காட்டினால், பழைய ரிஜிஸ்திரேஷனையே continue செய்வதற்கு வழிவகைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பொதுவாக வேலை இல்லாதவர்களுக்கு வேலை தருகின்ற முறையிலே தான், அந்த அலுவலகம் பணியாற்றிக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ரிவைவ் செய்ய வேண்டும். அப்படி ரிவைவ் செய்ய அவர்கள் தவறிவிட்டால் புதியதாக ரிஜிஸ்தர் செய்ய வேண்டியதுதான். அதற்காக நாம் வருத்தப்பட வேண்டியது இல்லை.

திரு. போ. கோபாலன் : சில நேர்முகத் தேர்வுகளின்போது 20, 21 வயது உள்ளவர்களோடு வயது வரம்பைக் கடக்கக் கூடிய நிலையில் உள்ளவர்களும் அந்தத் தேர்வில் கலந்திருப்பார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் இளம் வயதுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். வருங்காலத்திலாவது அப்படிப்பட்ட தேர்வுகளின் போது வயது வரம்பைக் கடக்கக் கூடிய நிலையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு வேலைக்கு ஆட்களை அமர்த்துகிறபோது அவர்கள் பதிவு செய்திருக்கிற முறையை வைத்து யார் நீண்ட நாட்களுக்கு முன்னதாகப் பதிவு செய்திருக்கிறார்களோ அந்த அடிப்படையில் தான் அனுப்பப்படுகிறார்கள். பின்னாலே பதிவு செய்தவர்களை யாரும் அனுப்ப மாட்டார்கள். அப்படி அனுப்பியிருந்தால் அது பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : படித்து வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்கள் பல்லாயிரக்கணக்கில் குறிப்பாக பெண் ஆசிரியர்கள் 7 வருஷம், 8 வருஷம் ஆன பிறகும் கூட பதிவு செய்த இடத்திலிருந்து அழைப்பு வராமல் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். குறைந்த பட்சம் அவர்களுக்காவது வேலை கொடுக்க வயது என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்தி அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய பயிற்சிக்காக நாம் செலவு செய்திருக்கிறோம். அவர்கள் விசேஷ பயிற்சி பெற்றிருக்கும்

1979 மார்ச் 9]

காரணத்தால் குறிப்பாக அந்த வேலைக்குப் போக வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நல்ல முறையில் உணர்ந்து அவர்களுக்கெல்லாம் வயது வரம்பை 35 ஆக ஆக்கியிருக்கிறோம்.

வள்ளுவர் கோட்டம் அருகே அண்ணா சிலை.

*வினா எண் 306—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை வள்ளுவர் கோட்டத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாநகராட்சியால் விளக்கு வசதி செய்து தரப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம்.எனில் அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : —

(அ) மற்றும் (ஆ) அரசு விதித்துள்ள நிபந்தனைப்படி, சிலை வைக்க ஆகும் மொத்தச் செலவில் 20 சதவீத தொகையை மாநகராட்சிக்கு, சிலையின் பராமரிப்புக்காக, சிலை வைக்க, அனுமதி கோருபவர்கள் கட்ட வேண்டும். அந்தத் தொகை கட்டப்படவில்லை. எனினும், இச்சிலைக்கு சென்னை மாநகராட்சியால் தற்காலிகமாக விளக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : விளக்கு வசதி ஏற்படுத்தித் தந்திருப்பதற்காக அரசுக்கு நன்றி. அமைச்சர் அவர்கள் ஒரு விகிதாசாரம் பணம் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். தேசியத் தலைவர்களாக விளங்குகின்ற தந்தை பெரியார்,, பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்களின் சிலைகளுக்கு இந்த விதியை மாற்றி விளக்கு வசதி செய்து தரப்படுமா ? அண்ணா சாலையில் சைதாப்பேட்டை அருகே முதலமைச்சர் எதிர்கட்சித் தலைவராக இருக்கும்போது ஒரு அண்ணா சிலையை வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் இப்போது மாநகராட்சியினர் குப்பைகளை கொட்டி வைத்திருக்கிறார்கள். நான் பஸ்ஸில் போகும்போது பல முறை பார்த்திருக்கிறேன். இப்படிப்பட்ட தலைவர்கள் சிலைகள் இருக்கும் பகுதிகளை மாநகராட்சியினரும், நகராட்சியினரும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்று தமிழ்நாடு பூராவுக்கும் ஒரு சர்குலர் அனுப்ப நடவடிக்கை எடுப்பார்களா ?